★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 புரட்டாதி 18 ஜுல்கஃ: 1 இதழ்: 235
யாழ்ப்பாணம் புதன்கிழமை 4-10-78

யாழ்: நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
வெளிநாட்டுக் கடதாசியில்
ஃ பாஸ்போட் ஃ சான்றிதழ்
ஃ கட்டிடப்பிளான் ஃ புஸ்தகம்
எதுவானாலும்
சாதாரண சைஸ் ரூ. 1/-
இருபக்கமும் ரூ. 1-75
பெரியசைஸ் ரூ. 1-50, 2 , 3-50
சுப்பர் கனன்
கொப்பிசேவிஸ்
13, நவீன சந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

## குடும்ப நீதிமன்றங்கள்

[கொழும்பு]

இலங்கைச் சரித்திரத்தில் முதற் தடவையாக, குடும்ப நீதிமன்றங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

நேற்று பாராளுமன்றத்தில் நீதித் துறை சட்டமூலம் மீதான இரண்டாவது வாசிப்பின்போது, நீதிஅமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், புதிய நீதிமன்ற அமைப்பு பற்றி எடுத்துக் கூறுகையில், நீதிபரிபாலனமுறையை மறுசீரமைக்கும்முகமாக புதிய சட்ட மூலம் இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

(6-ம் பக்கம் பார்க்க)

# மாவட்ட அமைச்சர்கள் நாளை நியமனம்

# தொண்டமானுக்கும் பதவி?

(கொழும்பு)

**இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில், மாவட்ட அமைச்சர்கள் பற்றி இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டு, அதற்கான அங்கிகாரம் வழங்கப்படும். மாவட்ட அமைச்சர்கள் பதவிக்கான நியமனங்கள், அநேகமாக நாளை வியாழக்கிழமை வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

மாவட்டஅமைச்சர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவோர் பற்றி ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு விட்டபோதிலும், இன்று கூடும் அமைச்சரவைக் கூட்டத்திலேயே இறுதிவடிவம்பெற்று, அமைச்சரவை அங்கிகாரம் பெறும்.

உயர்மட்ட அரசாங்க வட்டாரங்களின்படி, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவனியா ஆகிய மாவட்டங்களுக்குரிய அமைச்சர்கள் விவாகாரத்தில் பிரச்னை எதுவும் எழவில்லை என்றும் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்குரிய அமைச்சர்களைத் தெரிவுசெய்வதிலேயே பிரச்னை இலேசாகத் தலைகாட்டியதாகவும் தெரியவருகிறது.

### தொண்டமான் நியமனம்

கூட்டணி எம். பி க்கள் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்க மறுப்பதால், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் ஒரே அமைச்சர் நியமிக்கப்படலாமென்றும், அநேகமாக திரு எஸ். தொண்டமான் யாழ்—முல்லைத்தீவு மாவட்ட அமைச்சராக நியமிக்கப்படுவது உறுதியாகிவிட்டதாகவும் தெரியவருகிறது.

யாழ் —முல்லைத்தீவு மாவட்ட அடைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ள திரு. எஸ். தொண்டமான் ஆரம்பத்தில் மறுத்தபோதிலும், அரசு வட்டாரங்களின் வற்புறுத்தல்கள் காரணமாக இப்பதவியை அவர்ஏற்றுக்கொள்ளலாமென்றும் அறியப்படுகிறது,

யாழ்ப்பாணம்-முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒரு சிங்களவரையோ அல்லது ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளரையோ நேரடியாக நியமிக்க அரசு விரும்பவில்லையென்றும், வற்புறுத்தலின் மீதே இப்பதவியை திரு. எஸ். தொண்டமான் ஏற்றுக்கொள்கிறாரென்றும்அரச வட்டாரங்கள் நேற்றுத்தெரிவித்தன.

இது பற்றி நேற்று, கிராமியத்தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர் திரு. தொண்டமானுடன்தொடர்புகொண்டபோது அவர் கருத்து எதுவும் வெளியிடவில்லை. (ம

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்

## தலைமை அலுவலகக் கட்டட வேலைக்கு பத்துலட்சம் ரூபா!

### கமிஷன்முன் வங்கி முகாமையாளர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலக கட்டட வேலைகளுக்கு பத்து லட்சம் ரூபா மேலதிகப் பற்றாக வழங்கப்பட்டது என்று ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழு முன்னிலையில் ஹட்டன் தேசிய வங்கி பொதுமுகாமையாளர் திரு. ஹஸ்டன் குணவர்த்தன சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

முதலில் ஐந்துலட்சம் ரூபா வழங்கப்பட்டபோது முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா உட்பட மூவரின் உறுதியுரைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன என்றும், மேலும் ஐந்து லட்சம் ரூபா வழங்கப்பட்டபோது முன்னாள் அமைச்சர்கள் கே. பி இரத்நாயக்கா. மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர் தனிப்பட்ட முறையில் உத்தரவாதம் வழங்கினர் என்றும் தவணைமுறையில் செலுத்தப்படும் என்று கூறப்பட்டபோதிலும் அப்படிச் செலுத்தப்படவில்லை என்றும் வங்கி முகாமையாளர்தெரிவித்தார்.

## கொட்டும் மழையிலும் இறுதி .அஞ்சலி

# மரணச்சடங்கு இன்று நடைபெறுகிறது

(வத்திக்கான்)

பரிசுத்தபாப்பரசர் முதலாவது அருளப்பர் சின்னப்பரின் மரணச்சடங்குகள் இன்று புதன்கிழமை சென் பீட்டர்ஸ் சதுக்க திறந்தவெளியில் நடைபெறும்.

வத்திக்கானில் நேற்று மூன்றுவது நாளாக, தொடர்ந்து மழை பெய்துகொண்டிருந்தபோதிலும் ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையாகச் சென்று, மறைந்த தங்கள் திருத்தந்தைக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். நேற்று மாலைவரை சென்.பீட்டர்ஸ்தேவாலயத்தில் பொதுமக்கள் தரிசனத்துக்கு வைக்கப்பட்டு, இன்று சென்பீட்டர்ஸ் சதுக்க திறந்த வெளிக்கு திருத்தந்தையின் பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

## தேசிய துக்கதினம் இன்று!

(கொழும்பு)

காலஞ்சென்ற பாப்பரசருச்கு அஞ்சலிசெலுத்தும்முகமாக இன்று புதன்கிழமை தேசியதுக்கதினமாக அனுஷ்டிக்கப்படும்.

இதுசம்பந்தமாக அரசாங்கம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில்; அரசாங்க கூட்டுஸ்தாபன மற்றும் பொது கட்டிடங்களில், தேசியக் கொடி இன்று அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது

காலஞ்சென்ற பாப்பரசரின் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து, ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும் அனுதாபச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளனர்.

## இராமச்சந்திரன் ராஜினமா

பாண்டிச்சேரி, அக். 3

பாண்டிச்சேரி உள்துறை அமைச்சர் திரு. டி. இராமச்சந்திரன் தமது அமைச்சர் பதவியை இன்று ராஜினமாச் செய்துள்ளார்.

## "கொடூரமான ஒரு சட்டம்!"

### புதிய மதுவிலக்கு சட்டம்பற்றி கலைஞர்

சென்னை, அக். 3

இன்று முதல் அமுலுக்குவந்திருக்கும் புதிய மதுவிலக்குச் சட்டம்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணநிதி கருத்து வெளியிடுகையில், ''மிகவும் கொடூரமானது'' என்று தெரிவித்தார்.

புதிய தீவிர மதுவிலக்குச் சட்டம்பற்றி திரு. மு. கருணநிதி நிருபர்கள் மத்தியில் இன்று பேசுகையில், எதிர்க் கட்சியினர்மீது பொய்க்குற்றச்சாட்டுக்களை சுமத்த இப் புதிய சட்டம் பயன்படுத்தப்படலாம் என்றார்.

''மது அருந்துவது ஒரு தீய பழக்கம் இதனை நாட்டைவிட்டகற்ற எமது பூரண ஒத்துழைப்பு உண்டு, ஆனல் இச் சட்டத்தின்பேரில் அதிகார துஷ்பிரயோகம் நடக்கக் கூடாது. இந்த அவசரச் சட்டம் சந்தேகப்படக்கூடியதாகவே காணப்படுகிறது'' என்றும் கலைஞா திரு. கருணநிதி குறிப்பிட்டார்.

## கல்லூரிபெயரில் நிதிமோசடி

(யாழ்ப்பாணம்)

சென். ஜோன்ஸ் கல்லூரியின் நலன்புரிச்சங்கத்திற்கெனவும், புதிய கட்டிட வேலைகளுக்கென்றும்கூறி சிலர் நிதி சேகரித்து மோசடிசெய்து வருவதை கல்லூரி நிர்வாகம் கண்டுபிடித்துள்ளது.

கல்லூரி அதிபர் திரு. எஸ், ஆனந்தராஜன் எமது நிருபருக்கு இதுபற்றி தகவல் தெரிவிக்கையில்;

''அண்மைக் காலமாகச் சிலர், இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகிறது. எமது கல்லூரி முகாமையாளரோ அல்லது நானோ எமது கல்லூரியின் சார்பில் நிதி சேகரிப்பதற்கு எவருக்கும் அதிகாரம் வழங்கவில்லை. நிதி சேகரிப்பவர்களாகக் கூறி, தம்மை அறிமுகஞ்செய்பவர்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்குமாறும், அண்மையில் உள்ள பொலிஸ்நிலையத்திற்கு இவர்கள் பற்றி உடனடியாகத் தகவல் கொடுக்கும்படியும் பொதுமக்களை வேண்டுகின்றேன்'' என்று கேட்டுக்கொண்டார். (கெ)

கப்பல்களில் வேலைகள்
RADIO OFFICER
National Institutes பயிற்சிகளுக்கு 2-ம் பக்க விளம்பர இல. 0489ஐ பார்க்கவும். 0490

## முதல்வர் எம். ஜி. ஆர். சுகயீனம்

### பூரண ஓய்வெடுக்குமாறு டாக்டர்கள் யோசனை

சென்னை, அக். 3

தமிழகமுதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் சுகயீனமுற்றிருப்பதாக அவரது செயலாளர் அறிவித்துள்ளார்.

முதல்வர் திரு. எம் ஜி. இராமச்சந்திரன் உடல்நலக் குறைவுற்றிருப்பதாகவும் இரண்டு தினங்களுக்கு பூரண ஓய்வெடுக்குமாறு டாக்டர்கள் ஆலோசனை கூறியிருப்பதாகவும், பொதுநிகழ்ச்சிகள் எதிலும் அவர் இன்றும் நாளையும் கலந்துகொள்ளமாட்டார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### தேவை

தொழில் நுட்பவியலிலும் இயந்திரம் திருத்துவதிலும் தகைமை பெற்ற அல்லது தண்ணீர்பம்புகள், தெளி கருவிகள், மின்சாரசாதனங்கள் மற்றும் றேடியோக்கள் பழுது பார்த்தலில் குறைந்தது ஐந்து வருட அனுபவம் உள்ளவர் சம்பளம் அல்லது லாபத்தில் பங்கு எனும் அடிப்படையில் நேரில் தீர்மானித்துக் கொள்ளலாம். வயது, அனுபவம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். ஒட்டோஸ் லிமிட், யாழ்ப்பாணம். 0485

அரியாலையில் உள்ள இரும்புத் தொழிற்சாலையில் வேலை பழகுவதற்கு க. பொ. த. உயர்தரம் வரை படித்த இருபாலாருக்கும் இடமுண்டு. ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0486

### காணவில்லை

சுமார் 13 வயது மதிக்கத்தக்கவரும், பொதுநிறமுடையவரும், 4'—6'' உயரமுடையவரும், கண் சற்று விகாரமானவருமான கலாமதி கரையாண்டியை கடந்த 29-9-78 முதல் காணவில்லை. இவரைப் பற்றிய விபரங்கள் தெரிந்தவர்கள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ, அல்லது கீழ்க்காணும் முகவரிக்கோ தகவல் கொடுத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். இல. 7, வெள்ளாந் தெரு, வண்ணார்பண்ணை. 0478

### விற்பனைக்கு

2'' × 42' அளவுடைய 2 கல்வனைஸ்ட் குழாய்கள் 8-10-78 ஞாயிறு பிற்பகல் 4 மணியளவில் அராலி தெற்கு சனசமூக நிலயத்தில் வைத்து விற்கப்படும். 0483

இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட பாவித்த கடைச்சல் இயந்திரங்கள் நல்ல வேலை செய்யும் நிலையில், குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். ஓடர் செய்த இரண்டு மூன்று மாத காலத்திற்குள் விநியோகிக்கப்படும். குறிப்பிட்ட கையிருப்பே உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்க: E R. ஜோசெப், 17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், போன்: 7566. 0479

### பயிற்சி

உள் நாட்டிலோ, வெளி நாட்டிலோ வேலை வாய்ப்புப் பெற இலகுவான விரைவான பயிற்சி பெறுங்கள். நீங்களும் சிறந்த Air-Conditioning மெக்கானிக்காக எழுதுங்கள எஸ். சிவஞானம், 126, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0482

வெளிநாடுகளிலும், கப்பல்களிலும் வேலைகள் பெற நவீன வெளிநாட்டு முறையில் தொழிற்பயிற்சிகள். வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், Radio Officers P M G Certificate, City & Guilds (Electrical) முதலியன. ஆங்கிலமும், St. John's Ambulance முதலுதவிப் பயிற்சியும் இலவசமாகக் கற்பிக்கப்படும். National Institutes 57, 59. பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். 0489

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

கமநலச் சேவை நிலயம் அமைப்பதற்கான

## கேள்விப் பத்திரம் கோருதல்

இடம்: புங்குடுதீவு

வேலை விபரம்: முடிவு பெறுத பகுதிச் சுவர் அமைத்தலும் மேற்கொண்ட நிர்மாண வேலைகளும்.

தகுதி: கட்டிட நிர்மாண வேலைகளில் அனுபவமுள்ளவர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கம் முதலியன.

கேள்விப்பத்திரங்கள் வழங்குதல்: வெள்ளி 13-10-78 பகல் 12 மணிக்கு முன்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றல்: திங்கட்கிழமை 16-10-78 பிற்பகல் 2-30 மணி வரை.

கேள்விப் பத்திரங்களை ரூபா 50/- வைப்புப் பணம் கட்டி கமநலச் சேவைகள் கந்தோர் யாழ்ப்பாணச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மறு விபரங்களை மேற்படி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஜே. செந்தில்நாதன்,
உதவிப் பணிப்பாளர்,
கமநலச் சேவைப்பகுதி,
யாழ்ப்பாணம்.

2-10-78. 0487

---

## கேள்வி விளம்பரம்

அச்சுவேலி கிராமசபை நிர்வாக உத்தியோகத்தரால் கீழ்க்காணப்படும் வேலைகட்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. செல்வநாயகபுர வீதி வேலை.
2. காட்டுமலைக் கந்தசாமி கோவில் மின் விஸ்தரிப்பு வேலை.
3. அச்சுவேலி சந்தை மலகூடம் மாற்றியமைத்தல்.

முதல் இரு வேலைசட்கும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 25/-ம் பிணைப்பணமாக ரூபா 200/-ம் மூன்றும் வேலைக்கான மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 10/-ம், பிணைப் பணமாக ரூபா 100/-ம் கட்டியதன் பேரில் 17-10-78 மாலை 3-00 மணி வரை வழங்கப்படும், உத்தியோகபூர்வ கேள்விப்பத்திரத்தில் பூர்த்தி செய்து 18-10-78 காலை 10-00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படல் வேண்டு .

ஒப்பம்

நீ. ப. ஜெகநாதன்,
நிர்வாகஸ்தர்,
கிராமசபை,
அச்சுவேலி.

கிராமசபை,
அச்சுவேலி,
29-09-78. 0475

---

## நவராத்திரிவிழா

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை ஸ்ரீசந்திர சேகரப்பிள்ளையார் கோயிலில் நவராத்திரி விழா விமரிசையாக நடைபெற்று வருகிறது. தினமும் கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலய மாணவ- மாணவிகளின் பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெறுகிறது. (ஊ)

ஃ ஃ ஃ

### சன்மார்க்க சபையில்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் எதிர்வரும் 7ம் தேதி நவராத்திரிநடனவிழா கலைப் பேரரசு ஏ ரி பொன்னுத்துரைதலைமையில் நடைபெற இருக்கின்றது. கொக்குவில் அமரகலா நாட்டியாலய ஆசிரியை செல்வி ரேலங்கி செல்லையாவும் அவரது மாணவிகளும் நாட்டிய நிகழ்ச்சிகள் வழங்குவர். (அ)

---

## அறிவித்தல்

28-09-78இல் நாமகள் சனசமூக நிலைய கட்டிட நிதிக்காக அம்முன்றலில் நடைபெற்ற அதிர்ஷ்ட லாபச்சீட்டுக்களின் முடிவுகள்.

1-வது பரிசு: 756
2-வது பரிசு: 2403
3-வது பரிசு: 292

ஆறுதல் பரிசுகள்:
(1) 264 (2) 1858
(3) 1031

கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

நாமகள் சனசமூக நிலையம்,
கரவெட்டி கிழக்கு,
0480 கரவெட்டி.

---

சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## கேள்விப்பத்திர விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகட்கு இந்நகராட்சி மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

### வேலைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சேகண்டி வாய்க்கால் ஒழுங்கை | 2-ம் முறை | தார் | இடுதல் |
| 2. | குசவமடம் 1-ம் ஒழுங்கை | ,, | ,, | ,, |
| 3. | ராசா தோப்பு ஒழுங்கை | ,, | ,, | ,, |
| 4. | கண்டுவில் ஒழுங்கை | ,, | ,, | ,, |
| 5. | ஐயர் வீதி | ,, | ,, | ,, |
| 6. | புதுச்சந்தை வீதி | ,, | ,, | ,, |
| 7. | பவுண்டரி ரோட் | ,, | ,, | ,, |
| 8. | தாமோதரம்பிள்ளை ரோட் | ,, | ,, | ,, |
| 9. | நுணுவில் கல்வயல் ரோட் | ,, | ,, | ,, |
| 10. | வேலாயுதபிள்ளை ரோட் | ,, | ,, | ,, |
| 11. | சிவன் கந்தையா ரோட் | ,, | ,, | ,, |
| 12. | முருகமூர்த்தி ரோட் | ,, | ,, | ,, |
| 13. | நெல்லியடி முருகன் ரோட் | ,, | ,, | ,, |
| 14. | விஞசித்தம்பி ரோட் | ,, | ,, | ,, |
| 15. | மில் ரோட் | ,, | ,, | ,, |

கேள்விப்பத்திரங்கள் 19-10-78 திகதி நண்பகல் 12-00 மணி வரையும் இந்நகர சபை அலுவலகத்தில் கேள்வி ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/- வைப்புப் பணமாகவும் கேள்விப் பத்திரம் ஒவ்வொன்றுக்கும் ரூபா 5/- கேள்விப்பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் காகித உறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக இவ்வேலைக்குரிய பெயரை எழுதி விசேட ஆணையாளர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு ஒக்டோபர் மாதம் 23-ந் திகதி முற்பகல் 12-00 மணிக்கு முன் இந்நகரசபையின் சபா மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடப்பட வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

இதைப்பற்றிய விதிகளும் விபரங்களும் இன்னும் அறிய விரும்பின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
விசேட ஆணையாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
2-10-78.

0484



ஈழநாடு The Eelanaadu

## மேற்காஸிய நிலைமை

இஸ்ரேலுக்கும் - எகிப்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள காம்ப்டேவிட் உடன்படிக்கையின் அடிப்படையில் இந்த இரு நாடுகளுக்குமிடையில் நேரடிப் பேச்சுக்கள் விரைவில் வாஷிங்டனில் நடைபெறவிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

மேற்காஸியாவில் அமைதி ஏற்பட்டு பலஸ்தீன மக்களின் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்படவேண்டும் என்பதையே அமைதியை விரும்பும் சகல நாடுகளும் விரும்புகின்றன. ஆனால் இஸ்ரேலுக்கும் - எகிப்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள உடன்பாடு கிணறு வெட்ட பூதம் கிளம்பிய' கதையாக முடிந்துவிடுமோ என்ற அச்சம் இப்பொழுது தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

'வீழ்த்தப்படும் எதிரி மீண்டும் எழுந்துவிடுகிறான். ஆனால் சமரசமாகும் எதிரியோ அழிக்கப்பட்டுவிடுகிறான்' என்ற பொன்மொழிக்கமைய எகிப்திய அதிபர் இஸ்ரேலுடனான பகைமைப் போக்கை ஒழித்து பேச்சுவார்த்தைகள் மூலமே பிரச்னைகளுக்கு முடிவுகாணத் துணிந்திருப்பது ஏனைய அரபுநாடுகளுக்கிடையில் அதிருப்தியையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த உடன்பாட்டுக்கு எதிராக அரபுநாடுகள் பலவும் ஒன்று திரளஆரம்பித்துள்ளன. இதனால் தன் இனத்தவர்களையே பகைத்துக்கொண்ட நிலைக்கு எகிப்து தள்ளப்படுமா என்பது பொறுத்துப் பார்க்கவேண்டிய விஷயம்.

உண்மைநிலை என்னவெனில் அரபு நாடுகளுக்கிடையிலேயே சரியான ஒருமைப்பாடு இல்லாமல் போனதே இஸ்ரேலுடன் - அதிபர் சதாத் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டிய நிலையை உருவாக்கிற்று. அதைவிட அரபுநாடுகள் வல்லரசுகளின் ஆதிக்கத்துக்குள்ளாகி இருதுருவங்களாகப் பிரிந்து நிற்பதும் அங்கு நிரந்தர அமைதி ஏற்படுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்துவருகின்றது.

எவ்வாறு பார்ப்பினும், இஸ்ரேல் என்ற ஒருநாடு உருவாகி நிலைகொண்டுவிட்ட உண்மையை இனி மேலும் மறுதலிக்காமல், அரபுநாடுகள் தங்களுக்கிடையிலான வேற்றுமைகளைக் களைந்து ஒருமுகப்பட்டு நிற்பதே மேற்காஸியாவில் நிரந்தர அமைதி ஏற்படுவதற்கு வழிவகுப்பதாகும்.

## மணிவாக்கு

வயது ஏற ஏற புற அழகு அகத்துக்குள் ஒளித்துக் கொண்டு விடுகிறது.

—எமர்ஸன்

## இன்று

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள்கோயில் மகோற்சவத்தில் தினமும் மாலை 6 மணியிலிருந்து 7 மணிவரை பிரம்ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா, கம்பராமாயண தொடர் விரிவுரை நிகழ்த்திவருகிறார், இன்று 'குகனும் பரதனும்' என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்துவார்.

# "பல்கலைக்கழக அனுமதி: ஒருசில நிர்வாகிகளிடம் விடக்கூடாது" -- பேராசிரியர் செ. இராசரத்தினம்

(யாழ்ப்பாணம்)

"தரப்படுத்தல் தடுமாற்றத்தையும் விரக்தியையும் மாணவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. ஒரு தேசியசபை அமைக்கப்பட்டு பல்கலைக்கழக அனுமதிக்கான வழிமுறைகள் காட்டப்படவேண்டும். இதனை ஒருசில குறிப்பிட்ட நிர்வாகிகளிடம்விடக்கூடாது. தேசிசபை அமைக்கப்படும்வரை பல்கலைக்கழகப் பிரவேசம் தகுதி அடிப்படையிலேயே இருக்க வேண்டும். வம்சாவழி, அல்லது பிரதேச அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதியில் பாரபட்சம் காட்டக்கூடாது."

இவ்வாறு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வளாகப் பொருளியல் வத்தக பீடத்தலைவர் பேராசிரியர் செ. இராசரத்தினம் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திருமதி கேசவமலர் இராசரத்தினம் பரிசில்களைவழங்கினார்.

பேராசியர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

"புதியஉயர்கல்வி மசோதா அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றது. இந்தப் புதிய சட்டத்தின்கீழ் சுயேச்சையான பல்கலைக்கழகங்கள் இயங்கும். அரசின் கட்டுப்பாடு ஓரளவுதான் இருக்கும். இது ஒரு நல்ல அம்சமாகும். வடபகுதியில் உள்ள பல்கலைக் கழகத்திலும் சுதந்திரமாகவும் சுயேச்சையாகவும் தீர்மானங்கள் எடுக்கமுடியும். பல்கலைக்கழக செனட்டும் நிர்வாகக் குழுவும் பொதுமக்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும்: எங்களது கறபித்தலும் பட்டங்களும் உள்ளூர் சூழலின் அடிப்படையிலேயே அமையும்.

பிள்ளைகளுக்கு விஞ்ஞானம் கற்பிப்பதில் பெற்றோர் முக்கிய கவனம் செலுத்துகிறார்கள் இதற்கு நான் எதிரல்ல. வளரும் சமுதாயத்திற்கு விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் முக்கியமானவை. அதற்காக, விஞ்ஞானத்தில் ஆர்வமில்லாத மாணவனை அதைப்படிக்கும்படி வற்புறுத்துவது நல்லதல்ல.

### ரியூசன் கல்வி

"ரியூசன் கல்வி இந்தக் காலகட்டத்தில் ஒரு நாகரிகமாக வந்துவிட்டது. இது சில மாணவர்களுக்கு முன்னேற்றம்தரலாம். ரியூசனில் பழகிய மாணவர்கள் பாடசாலைகளில் நன்கு கற்றும், பல்கலைக்கழத்தில் ரியூசன் கிடைக்காததால் அவர்களுக்குப் பிரச்னையாக உள்ளது"

### 50ம் ஆண்டுக்குப்பின் ஒருமைப்பாடு மறைந்தது

கல்லூரி அதிபர் திரு. ஈ. கே. சண்முகநாதன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"1950 ம் ஆண்டுவரையும் ஆங்கிலம் போதனமொழியாக இருந்தபோது தெற்கேயிருந்து வந்தது சிங்களமாணவர்கள் வடக்கில் கல்வி கற்றனர். தமிழ் மாணவர்களும் தெற்கேயுள்ள கல்லூரிகளில் பயின்றனர் கல்லூரிகளின் மேல் வகுப்புகளிலும் சர்வகலாசாலையிலும் உண்மையான இன ஒருமைப்பாடு காணப்பட்டது. அரசியல்வாதிகள் நவதேசிய வாதிகளாக மாறியபோது இந்த ஒருமைப்பாடு மறையத்

(6-ம் பக்கம் பார்க்க)

## சிரேஷ்ட மாணவர்கள் மறுப்பு

[யாழ்ப்பாணம்]

கடந்த 2-10-78 அன்று 'ஈழநாடு' 6ம் பக்கத்தில் "இளைஞன் நையப்புடைக்கப்பட்டார்" என்ற செய்தியில், யாழ். வளாகத்தில் புதிய மாணவர்கள் "சிரேஷ்ட மாணவர்கள் 'ருகிங், செய்யப்படுவதற்கும் மேற்படி சம்பவத்துக்கும் தொடர்பிருக்கலாம்" என்றிருப்பது தவறு என்று மேற்படி வளாக சிரேஷ்ட மாணவர்கள் மறுத்துள்ளனர்.

குறித்த சம்பவம் தனிப்பட்ட இருவருக்கிடையில் நடந்த சம்பவம் என்றும் வளாகத்தின் சிரேஷ்ட மாணவர்களுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை யென்றும் அவர்கள கூறினர்.

# கல்வியும் செல்வமும் வீரமும் பெறுவோம்

---சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்

ஒன்பது நாட்கள் கொண்டாடும் விழா நவராத்திரி. இந்த ஒன்பது தினங்களிலும் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி என்ற மூன்று பெண் தெய்வங்களையும் ஆராதிக்கின்றோம். தேவி வழிபாடு அல்லது சக்தி வழிபாடு இந்த விழவின் பிரதான நோக்கமாகும்.

பராசக்தியைக துர்க்கா ரூபமாக உபாசித்தால் பயநாசம் உண்டாகும். இலட்சுமி ரூபமாக உபாசித்தால் செல்வப் பெருக்குண்டாகும். சரஸ்வதி ரூபமாக உபாசித்தால் கல்விப் பெருக்குண்டாகும். நவராத்திரி நாட்களில் 'கொலு' வைக்கப்படுகிற வழக்கம் உண்டு. படைப்புக் கடவுளாகிய பிரமதேவருக்கு நேர்ந்த சகல ஆபத்துக்களையும் போக்கி, முன் படைத்ததுபோலவே மேலும் படைத்தற் றொழிலை நடத்த அருள் புரிந்த தேவியை நடுவே வைத்து, அருட் சக்தியைச் சுற்றி, இந்த உலகப் பொருட்களையெல்லாம் அழகுற வைத்து, உலகில் வாழ அருள் புரிந்த ஆதிசக்தியை வணங்குவதையே அது குறிக்கிறது.

புராணக்கதைகளின்படி இராமபிரானின் மூதாதையர்களில் ஒருவரே இவ்விழாவை முதன் முதலில் கொண்டாடினார் என்றும் ஒரு ஐதீகம் இருந்துவருகிறது. அமாவாசை இரவு தொடக்கம் பாரத பூமியில் உள்ள ஒன்பது நதிகளிலிருந்து ஒன்பது குடங்களில் நீர் கொண்டுவரப்பட்டு அவைகளில் நவசக்திகளையும் ஆவாகனம் செய்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கன்னிப் பெண்ணைத் தேவியாகப் பூஜித்து வந்ததாகக் கூறப்படுகின்றது.

இவ்வொன்பது நாளும் இரண்டு முதல் பத்து வயதுள்ள கன்னிப் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம், சந்தனம், பழங்கள் முதலியன கௌரி பூஜைக்குப்பின் வழங்கப்படுவதை இந்த விரதத்தின் ஒரு சிறப்பியல்பு எனலாம். குழந்தைகளுக்கு நவராத்திரி தினங்களில் ஒரு விசேஷ இடம் உண்டு. குழந்தை விளையாட்டைப்போல் தேவியின் திருவிளையாட்டும் நிகழ்ந்து உலகத்தைப் படைத்திருக்கிறது என்பது தேவி பக்தர்களின் கொள்கை. இந்நிலையில் தேவியைக் குமரியாக வழிபடுகிறார்கள். இங்ஙனம் வழிபடும்போது அவர்களைத் தெய்வாம்சமுள்ள குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, உரோகிணி, சாளிகா, சண்டிகா, சாம்பவீ, துர்க்கா, சுபத்திரா ஆகிய தேவியராகக்கண்டு வழிபடல் முறையாகும்.

(5-ம் பக்கம் பார்க்)


புதிய ஹெடோனல் 'எம்'

40% எம். சி. பி. ஏ. மற்றும் சோடியம், பொட்டாசியம் ஆகிய உப்பு அடங்கிய களை கொல்லி.

பயிர்க் கொல்லி களை விட்டு வைக்காமல் வேரோடொழிக்கும். உறுதியாக அதிக லாபம் தரும்.



விளைபொருள்களை உறுதுணை நின்று காக்கும் ஹெடோனல் 'எம்',

நெல், கரும்பு, சோளம், மற்றும் புற்றரைகளைப் பாதிக்கும் அகன்ற இலைக்களைகளையும், புதர்ச் செடிகளையும் செப்பமாகவும் சிக்கனமாகவும் ஒழித்துவிடும்.

பயிர்களையும் பண லாபத்தையும் பாதுகாக்கப் பாவியுங்கள் ஹெடோனல் 'எம்'.

நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள் !

| | |
|---|---|
| மூலப் பொருட்சத்து உற்பத்தியாளர் : | இலங்கையில் தயாரிப்போர் : |
| பேயர் | ஹேக்கெ லிமிட்டெட் |
| ஜெர்மனி | 400, டீன்ஸ் வீதி, |
| | கொழும்பு 10. |



P-9124b

## மத்திய கிழக்கு சமாதானப் பேச்சு:

# இஸ்ரேலிய எகிப்து தூதுக்குழுக்களை வாஷிங்டன் அனுப்புக

## கார்ட்டர் அழைப்பு

வாஷிங்டன், அக். 3

மத்திய கிழக்கில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் நோக்குடன் தாம் டேவிட் மகாநாட்டு சமரச உடன்பாடுகள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்ததூதுக்குழுவினரை அமெரிக்காவுக்கு அனுப்புமாறு அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் எகிப்திய அதிபர் அன்வர் சதாத்துக்தும் இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகினுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை எகிப்திய அதிபரும் இஸ்ரேலியப் பிரதமரும் ஏற்கனவே உத்தியோகபூர்வமற்றமுறையில் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அமைச்சர்கள் ரீதியில் நடைபெறும் இப்பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேலிய-எகிட்து வெளிநாட்டு அமைச்சர்கள் தலைமையிலான குழுக்களும் அமெரிக்க வெளிநாட்டமைச்சரும் கலந்துகொள்வர்.

இம்மாதம் 12ம் திகதி வாஷிங்டனில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும். (இ)

## மார்ட்டின் லூதர்கிங்-காந்திஜியின்

# கொள்கைகள் இன்றும் பொருத்தமுடையவை

## ஜெகஜீவன்ராம் கருத்து

புதுடில்லி, அக். 3

"மகாத்மா காந்தி, டாக்டர் மார்ட்டின் லூதர்கிங் ஆகியோரது கொள்கைகள் அவர்கள் வாழ்ந்த காலத்தில் எவ்வாறு பொருத்தமுடையதாக இருந்ததோ, அதேபோன்று அவர்களது கொள்கைகள் இன்றும் மிகப்பொருத்தமாக உள்ளன."

இவ்வாறு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் கூறினார்.

மார்ட்டின் லூதர்கிங் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற மகாத்மாகாந்தியின் 109வது ஜயந்திதின விழாவில் பேசுகையில் திரு. ஜெகஜீவன்ராம் மேலும் கூறியதாவது:

டாக்டர் கிங் நிறவேற்றுமையை எதிர்த்துப் போராடினார். மகாத்மா காந்தி தீண்டாமையையும், நிறவேற்றுமையையும் அடியோடு ஒழித்துக்கட்டப் போராடினார். எனவே இன்றைய நிலையில் இவர்களின் வழிகளிலேயே செல்லவேண்டி உள்ளது.

வன்முறையை அஹிம்சையால் வெல்லும் புதிய புரட்சிப் போராட்டம் ஒன்றை நடத்திய மகாத்மா காந்தியை நாம் என்றுமே மறந்துவிட முடியாது. (இ)

## பயிற்சி வகுப்புகள்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அரசாங்க மருந்து கலவையாளர்களுக்கான வருடாந்த பயிற்சி வகுப்புகள் இம்மாதம் 30ந் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வைத்தியசாலையிலுள்ள மருந்தாளர்களினால் இவர்களுக்கு மெற்றிக் அளவுகளில் மருந்து கலவைகள் தயாரித்தல், நஞ்சு மருந்துகளைக் கையாளுதல் போன்ற பல துறைகளில் பயிற்சியளிக்கப் படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## நீதிமன்ற துப்பாக்கிக் கொள்ளை:

# வழக்குத் தொடுநருக்கு அறிக்கை அனுப்பப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்ற துப்பாக்கிக் கொள்ளை சம்பவம் தொடர்பான அறிக்கை பிரதி பகிரங்கவழக்கு தொடுநருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக, சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு. எஸ். கே. திரவிடநாயகம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சந்தேக நபர்களான 40 தமிழ் இளைஞர்களும் நேற்று பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

### பொலிஸ் அறிக்கை

சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் தர்மதாசா நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், இக்கொள்ளை சம்பவம் பற்றிய அறிக்கை பிரதி வழக்கு தொடுநருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், சந்தேகநபர்களைத்தொடர்ந்து ரிமாண்டில் வைக்குமாறும் கூறப்பட்டிருந்தது.

சந்தேகநபர்கள் சார்பில், சட்டத்தரணிகளான ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) எஸ். லோகேஸ்வரன், என் ஸ்ரீசாந்தா, எஸ். பி. மயில்வாகனம், சி. பரமசிவம் பிள்ளை, கே. மனோகரன், பி பாலசுப்பிரமணியம், எஸ். சுரேந்திரன் ஆகியோர் ஆஜராஞர்கள்.

சட். ஜி. ஜி. பொன்னம்பலம்: இது ஒரு அறிக்கையல்ல. சட்டத்தின்படி கடந்த தவணைக்கும் இந்த தவணைக்குமிடையில் பொலிசார் என்ன விசாரணை செய்திருக்கிறார்கள் என்பது பற்றிய அறிக்கைதான் தாக்கல்செய்திருக்கவேண்டும். அந்த வடிவத்தில் இந்த அறிக்கை அடங்கவில்லை. ஆதலால் இது சரியான அறிக்கையல்ல. இப்படியான அறிக்கையை சமர்ப்பித்து சந்தேக நபர்களை ரிமாண்டில் வைக்குமாறு கேட்கமுடியாது.

சட். எஸ். பி. மயில்வாகனம்: நான் ஆஜராகும் இரு சந்தேக நபர்களும் 77ம் ஆண்டு அக்டோபர் மாதம், கைதுசெய்யப்பட்டு பின் விடப்பட்டனர். அவர்களை இந்த வழக்கிலும் பொலிசார் சேர்க்கப் பார்க்கிறார்கள்.

சட். எஸ். லோகேஸ்வரன்: இன்று பொலிசார் முழு விபரங்களையும் கொண்ட அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. பொலிஸ் சமர்ப்பித்த அறிக்கையில் குற்றங்கள்பற்றி தெளிவாக எதுவும் கூறவில்லை.

(6ம் பக்கம் பார்க்க)

## திியேட்டருக்குள் புகுந்த வெள்ளம் 300 பேரை அடித்துச் சென்றது

கல்கத்தா, அக். 3

மேற்கு வங்காளத்தில் மோசமாகிவரும் வெள்ளப் பெருக்கை அடுத்து சினிமாக் கொட்டகை ஒன்றுக்குள் புகுந்த வெள்ளம், அங்கிருந்த சுமார் 300 பேரை அடித்துச் சென்றுள்ளது.

கல்கத்தாவிலிருந்து 60 கிலோமீட்டர் தொலைவிலிருந்த தியேட்டரிலேயே நேற்று வெள்ளம் புகுந்து அங்கிருந்தவர்களை அடித்துச் சென்றதுடன் தியேட்டரின் பெரும்பகுதியையும் நாசமாக்கிவிட்டதாம.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட மக்களின் சடலங்கள் நீரில்மிதந்து சென்றதைப் பலர் நேரில் கண்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இராணுவத்தினர் மீட்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

# பாலைவனத்துக்குக் கீழ் பாதாளக் கடல்!

அஷ்காபாத், அக். 3

தற்போது பாலைவனத்திட்டாக மாறியுள்ள புராதன அமு-தர்யா கழிமுகத்தினது தரைமட்டத்தின்கீழ் பாதாளக்கடல் ஒன்றுஇருப்பது கண்டுபிடிக்கபபட்டுள்ளது.

2000ம் ஆண்டுவரை கராகும் பாலைவனத்துக்கு நீர்ப்பாசனஞ்செய்ய இக்கடல் நீர் போதுமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளாகவே கராகும் பாலைவனத்தில் இதுபோன்ற பெரியதும் சிறியதுமான பாதாளக் கடல்கள் 20 கண்டுபிடிக்கப்பட்டன. பாலைவனத் தரை மட்டத்தின்கீழ் நீர்இல்லை என விஞ்ஞானிகள் முன்னர் கொண்டிருந்த கருத்தினை இக்கண்டுபிடிப்புகள் தற்போது மாற்றியுள்ளன. (இ)

## கறுப்பு இன பத்திரிகைக்குத் தடை

சாலிஸ்பரி, அக். 3

ருேடீஷிய கறுப்பு இன மக்களின் ஒரேஒரு பத்திரிகையான 'சிம்பாவே டைம்ஸ்' என்ற பத்திரிகைக்கு அரசு தடைவிதித்துள்ளது.

18 மாதத்துக்குமுன் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை சிம்பாவே விடுதலை இயக்கத்துக்கு ஆதரவாக செய்திகளை வெளியிட்டு வருவதாகக் குற்றம்சாட்டியே அப்பத்திரிகைக்கு வெள்ளையர் அரசு தடைவிதித்துள்ளது.

இப்பத்திரிகையின் நாளாந்த விற்பனை 20 ஆயிரம் பிரதிகள் ஆகும். (இ)

## மீன்பிடித்துறை

(புலோலி)

பருத்தித்துறை மீன்பிடியாளர்களின் நன்மைகருதி இன்பருட்டி சுப்பர்மடத்தில் ஒரு மீன்பிடித்துறை அமைக்கப்படவுள்ளது.

இந்த மீன்பிடித்துறை மீன்பிடித் துறைமுகக்கூட்டுத்தாபனத்தின் ஆலோசனையின் பேரில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தெரிவித்துள்ளார். (அ)




வயலில் உள்ள களைகளைக் கட்டுப்படுத்தியதால் நான் பெருவாரி விளைச்சலைப் பெற்றுக் கொண்டேன்

● ஒரு முறை மாத்திரமே உழவேண்டியதால் இருமுறை உழுவதற்கு போகும் செலவு மிகுதியாகிறது ● எல்லாக் களைகளையும் கட்டுப்படுத்துகிறது. ● நிலத்தை இழகப்பண்ணி மண்ணில் உள்ள பசளையைப் பாதுகாக்கின்றது.
● கிரமக்சோன் பாவித்தால் வருடத்தில் மூன்றுமுறை பயிர் செய்ய முடியும்.

கிரமக்சோன் முறையைப்பற்றி மேலும் விபரங்கட்டு எமக்கு எழுதுங்கள்.

இத்துடன் இணைக்கப்பட்ட கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பவும். உங்களுக்கு வேண்டிய உதவிக்கு எமது சேவையாளரை அனுப்புவோம்.

கூப்பன்

பெயர் ..........................

விலாசம் ..........................

..........................

வேண்டியசேவைகள ..........................

..........................

OG

CIC

கெமிக்கல் இண்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்

த. பெ. இலக்கம் 352 கொழும்பு 1

## "பிரிந்து வாழும் உரிமை பற்றி

# மக்கள் விடுதலை முன்னணி விளக்கம் தரவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பிரிந்து செல்லும் உரிமை பற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் புரட்சிகர கொள்கைப் பிரகடனத்துக்கும் அதன் தலைவர்கள் மேடைகளில் பேசியுள்ளகருத்துக்களுக்கும் முரண்பாடு இருப்பதாக 'ஈழநாடு' வாசகர் ஒருவர் கேள்விஎழுப்பியுள்ளார்.

இம்முரண்பாடு பற்றி மக்கள் விடுதலை முன்னணியினர் விளக்கம் தரவேண்டும் என்றும் அவர் கோரிக்கைவிடுத்துள்ளார்.

ஊர்காவற்றுறை, கரம்பனைச் சேர்ந்த திரு. எஸ். எஸ். இராஜதுரை என்பவர் எமக்கு எழுதியுள்ள கடிதத்தின் விபரம் பின்வருவாறு:-

''தமிழர் வாழ்வு பற்றித் தமிழரே தீர்மானிப்பர்'' எனும் தலையங்கம் கொண்ட செய்தியை 2-10-78 திங்கட்கிழமை ஈழநாடு இதழில் வாசித்தேன். ''தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். ஒன்று சேர்ந்து இந்நாட்டில் ஐக்கியமாக வாழ்வதா, அல்லது பிரிந்துபோவதா என்று தீர்மானிக்கும் உரிமையைத் தமிழ் மக்களுக்கு நாங்கள் வழங்குவோம் என்பதைத் தெளிவாகவும், உறுதியாகவும் இங்கு கூறிவைக்கின்றோம்'' என்று அச் செய்தியில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. உபதிஸகமநாயக்க கூறியிருக்கும் அம்முன்னணியின் கொள்கைக்கும் ''மக்கள் விடுதலை முன்னணியின் புரட்சிகர கொள்கை பிரகடனம்' எனும் புத்தக வெளியீட்டின் 18-ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ''அரசியல் அமைப்பின்'' இரண்டாவது அம்சமாக ''நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கும், சர்வாதிகாரமான நிலைமையை ஏற்படுத்துவதற்கும் எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்'' என்ற கொள்கைக்கும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாய் இருக்கிறது.

''சுயநிர்ணய உரிமை'. என்றால் அவ் உரிமைகொண்டிருப்போர் விரும்பியவேளை புறம்பாகப் பிரிந்து போவதற்கு உரிமை உடையவராவர் என்பதே. ஆயின் நாட்டை இரண்டாகப்பிரிப்பதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அதே முன்னணியின் கொள்கை அம்முன்னணி ஏற்கும் சுயநிர்ணய உரிமைக்கு முரணானது.

இம்முரண்பாட்டை மக்கள் விடுதலை முன்னணி விளக்கிக் கூறுமா?

---

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 18-ந் திகதி

புதன்கிழமை

(4-10-78)

**மேடம்:-** வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும், குடும்பத்தில் அமைதி நிலவும், களஸ்திர வழியால் நன்மைகள் வந்து சேரும், நீண்டநாள் கனவு இன்று நனவாவதற்கும் இடமுண்டு.

**இடபம்:-** விஷப்பரீட்சை பின்மூலம் விபரீதங்கள் விளைபக்கூடும், விவசாயிகளாயின் இன்று கடன்பட நேரிடலாம், இன்று முன்னெச்சரிக்கையாக இருக்கவும்.

**மிதுனம்:-** பூமியால் லாபமுண்டு, புத்திரர் புகழும் சேரும், பொதுசனத் தலைமைக்கான வாய்ப்பும் கிடைக்கும், உடல்நலம் பாதிக்கப்படும், ஆகையால் வாய்வுப் பதார்த்தங்களை நீக்கிக் கொள்ளவும்.

**கடகம்:-** வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. புதிய முயற்சிகள் இன்று கைகூடும், செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

**சிங்கம்:-** பொதுத்துறையில் நாட்டம் செல்லும், மக்களின் ஆதரவு கிடைக்கும், அரசியல் வாதிகளுக்கு செல்வாக்குப் பெருகும், பெரிய இடத்து தொடர்பு மூலம் புதிய பாதையும் பிறக்கும்.

**கன்னி:-** தொழில்புரியும் இடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக்கூடும், கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக்கொள்வீர்கள், பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:-** கண்துடைப்பு வேலை நடைபெறும், வீட்டில் சிறிய பூசல்கள் தோன்றி மறையும், எந்த விடயத்திலும் நன்றாக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும், ஆணவத்தை அடக்கவும்.

**விருச்சிகம்:-** குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும், பணவரவிற்கு இடமுண்டு, சிலருக்கு பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு.

**தனுசு:-** உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம், வைத்திய வழிகளில் பணம் செலவாகும், சகோதர வழியால் சஞ்சலத்திற்கிடமுண்டு, எண்ணிய கருமத்தில் தடை ஏற்படும், ஓய்வு விரும்பத்தக்கது.

**மகரம்:-** வாழ்க்கையில் சில முன்னேற்றமான சம்பவங்கள் இடப்பெறும், வாகன விருத்திக்கிடமுண்டு, நீர்ப்பாசனப் பகுதிகளில் கடமையாற்றுபவர்களுக்குச் சிறப்பான தினம், கல்வியிலும் ஆர்வம் பிறக்கும்.

**கும்பம்:-** இதயத்தின் ஏக்கம் இன்று தணியும், பரோபகாரச் சிந்தை மலிடும் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள், செல்வாக்குப் பெருகும்.

**மீனம்:-** அந்நிய நபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும், வாகனம் செலுத்துவோர் அதிக கவனம் செலுத்தவும், பிரயாணத்தின் போது பொருள் தவறக்கூடும், அவதானம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி

**திருமலை க. வேலுப்பிள்ளை**

---

## கல்வியும் செல்வமும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்நவராத்திரி விழா தேவியைக் குறித்துச் செய்வதால் தேவி பூஜை என்றும், நவமி நாளில் முடிவதால் 'மகா நவமி' என்றும் சரஸ்வதி பூஜையுடன் முடிவதால் சரஸ்வதிபூஜை என்றும் கடைசியாக ஆயுதங்களைப் பூஜிப்பதால் ஆயுத பூஜை என்றும் வழங்கப்படுகிறது.

பத்தாம் நாள் விஜயதசமியன்று மகாநோன்பு முடிவு அடைவதையே நம்மவர் 'மானம்பு' என்றும் கூறுகின்றனர்கள். விஜயதசமி யாத்திரை தொடங்குவதற்கு முக்கியமான நாள் என்று கருதப்படுகின்றது. முந்திய தினத்தில் அடுக்கிப் பூஜையில்வைத்திருந்த புத்தகங்களைப் புரட்டி வாசித்துப் பார்ப்பதுண்டு. இந்நாளில் குழந்தைகளுக்கு எழுத்தறிவிக்கத் தொடங்குவார்கள். வன்னிமரத்தை வழிபடுவதும் இந்நாளின் ஒரு சிறப்பியல்பு. எந்தப் புதிய காரியத்தையும் ஆரம்பம் செய்வதற்கு விஜயதசமி ஒரு நன்னாள் ஆகும்.

அசுர சக்தியை நீக்கித் தெய்வ சக்தியை விளங்கவைப்பது நவராத்திரி நோன்பாகும் இக்காலங்களில் ஆலயங்கள், பாடசாலைகள், மடாலயங்கள், வீடுகள் முதலான இடங்கள் எங்கும் வழிபாடுகள் நடைபெறுகின்றன. தன்னலமில்லாத் தாயன்பிற்கு இணையே கிடையாது. அந்தத் தாயின் வடிவாய், அன்பின் பிழம்பாய் அண்ட சராசரங்களின் அன்னையாயுள்ள பராசக்தியின் பெருங் கருணையும் அப்படியே அமைந்தது. அவளை நவராத்திரி புண்ணியதினங்களில்வழிபடில் இவ்வுலகில் சகல செல்வங்களும் கிட்டும்.

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
M'STRESS PAMILA
(Adults only)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
கண்ணன் வருவான்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 2-45, 6-15, 10-00
ஜெமினி-பத்மினி
மீண்டசொர்கம்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
என்.டி.ராமராவ்-அஞ்சலிதேவி
நடித்த
பட்டி விக்கிரமாதித்தன்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
போன: 466 தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-முத்துராமன்
ஜெயலலிதா-சோ
நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

REGAL (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00, & 9-30 P. m.
Elsa Armanni in
"THE SPECIALIST"
(Action Film)
Scope Color

ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள் 141-வது தினமாக
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி,ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

லிடோ
(யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தங்கத்திலே வைரம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி ஃ சரோஜாதேவி
நடித்த
தாமரை நெஞ்சம்
(புத்தம்புதிய பிரதி)

சாந்தி (யாழ்ப்பாணம்)
போன்: 7642. கடைசி 2 தினங்கள்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
நாகேஷ்...ராஜ்ஸ்ரீ... முத்துராமன்
(இருவேடங்கள்) K. பாலசந்தரின்
அனுபவி ராஜா அனுபவி
(புதிய பிரதி)

6-10-78 முதல் புதிய பிரதியாக புதுப் பொலிவுடன் புரட்சி நடிகரின் அரச கட்டளை

கடைசி இரு தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள் சிவாஜிகணேசன் கிரிஜா-கண்ணம்மா
T. R. ராஜகுமாரி S. A. நடராஜன் நடித்த
மனோகரா
(புத்தம் புதிய பிரதி)

நவராத்திரி பூஜைக்கு
தேவையான
ஃ விளைவு சூடம்
ஃ அபிஷேக திரவியங்கள்
ஃ அபிஷேகச் சந்தனம் (உடன் யந்திரத்திஞல் அரைக்கப்பட்டது)
ஃ அபிஷேகக் குங்குமம்
ஃ அபிஷேக விபூதி
ஃ அபிஷேக வாசனைதிகள்
ஃ கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்திகள்
ஃ நைவேத்தியப் பொருட்கள் (அவல், கற்கண்டு, சர்க்கரை முதலியன)
மற்றும்
சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
கடந்த 42 ஆண்டுகளாக நற்சேவை புரிந்துநற்பெயர் பெற்றவர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்)
53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541
Residence: 7068
''பாலேந்திராபில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11 போன்: 35825

# காந்தீயம் அரசியலுக்கு அப்பாற்பட்டதல்ல

## யாழ். நகர் காந்தி ஜயந்தி விழாவில்கதிரவேலுப்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

''காந்தியம் அரசியலுக்கு அப்பாற்பட்டது என்றும் காந்தியத்திற்கும் அரசியலுக்கும் தொடர்பு இல்லை என்றும் கூறுவோர்கள் தம்மைத்தாமே தூய்மையானவர்கள் என்று பறைசாற்றிக்கொள்ளும் போலிக் காந்தியவாதிகளாவார்கள்.''

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த காந்தியின் 109-வது ஆண்டு நிறைவு விழாவில் பேசிய கோப்பாய் எம் பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர் கு. நேசையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் கூறியதாவது:

காந்தியம் அறத்தினை, அன்பை, கடமை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டது. இம் மூன்றும் அரசியலுக்கு அவசியமானவை மனித சமுதாயத்தின் ஒற்றுமையே அரசியலுக்கு ஆதாரம். இது அகிம்சை முறையில் ஏற்படுவதாகும். எனவே காந்தியத்திற்கும், அரசியலுக்கும் தொடர்புண்டு அரசியலுக்கு அடிப்படையான அறத்தின் ரீதியில் உருவானதே காந்தியம்.

''கோழையாக வாழ்பவனிலும் பார்க்க, சுதந்திரத்திற்காகப் பலாத்காரத்தைப் பயன்படுத்துபவன் மேம்பட்டவன் என்ருர் காந்தியடிகள். நாங்களே, எங்களுக்குச் சுதந்திரமானவர்களாக, தூய்மையானவர்களாக வாழவேண்டும். சுதந்திரம் ஒரு தூய்மையான கடமையாகும்.

எமது இளைஞர்கள் மத்தியில், பலரிடம் பலாத்காரத்தின் மீதே நம்பிக்கையும், நாட்டமும் ஏற்படுகிறது. உரிமையோடு சுதந்திரமாக எமது சொந்த நாட்டில் வாழமுடியுமென்பதை உலகினுக்கு எடுத்துக்காட்டியுள்ள பெரும் சிறப்பினை உடையது உலகில் காந்தியமே. எமது அரசியல் இயக்கமும், இலங்கையில் 1956 முதல் காந்திய வழியிலேயே செயல்பட்டுவருகிறது. காந்தியத்தினை, எமது நாட்டுக்கும், மக்கள் வாழ்க்கைக்கும் ஏற்றவகையில் பயன்பாடுடையதாக்கி, அதன் வழியிலேயே தொழிற்படுகிறோம் நாம்.''

வணக்கத்துக்குரிய சர்வானந்தா பேசுகையில் கூறியதாவது: ''சத்தியத்தை அடிப்படையாகக்கொண்டு எழுந்த காந்தியம், எக்காலத்திற்கும் ஏற்றது. விலைவாசி ஏற்றம் வருமானப் பற்றாக்குறை என்பவற்றால் தினசரி வாழ்க்கையைப் பேணமுடியாதவர்களாகவும், விதேசியப் பொருட்களில் விருப்புக்கொண்டும், உரிமையிழந்தும் வாழும் நமது இன்றைய சமுதாயத்திற்குக் காந்தியம் மிகவும் அவசியமானதாக விளங்குகிறது.''

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத் தலைவர் திரு இ. கந்தையாவும் உரையாற்றினார். திருமதி மோகனாம்பிகை கணேசனின் பக்திப் பாடல்களும் இடம்பெற்றன. (ஊ)

## வழக்குத்...

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

ஆதலால் இந்த அறிக்கையை நீதிபதி நிராகரிக்கவேண்டும்.

சட் என். ஸ்ரீகாந்தா: சந்தேக நபர்கள் 5 வாரங்களுக்கு மேல் ரிமாண்டிலிருக்கிறார்கள். பொலிஸ் வந்து டி. பி. பிக்கு அறிக்கை அனுப்பிவிட்டதாக சொல்லமுடியாது 40 தமிழ் இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள்மீது என்ன குற்றச்சாட்டுகள் உண்டெனக் கேட்க எமக்கு உரிமையிருக்கிறது.

சட் சி பரமசிவம்பிள்ளை; சந்தேகநபர்களுக்கு எதிராக என்ன குற்றச்சாட்டுகள் உள்ளதென நாம் அறியமுடியாமலிருக்கிறது. சந்தேகநபர்கள் பற்றிவிரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சட் சி. மனோகரன்: பொலிசார் சந்தேக நபர்கள் பற்றி விரிவான அறிக்கை சமர்ப்பிக்கவில்லை அவர்களை விடுதலை செய்யவேண்டும்.

### 15 துப்பாக்கிகள் 5 றிவோல்வர்கள்

பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் தர்மதாசா சாவகச்சேரி நீதிமன்றத்தில் 12 துப்பாக்கிகளும், 5 கைத துப்பாக்கிகளும் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் இதில் 11 துப்பாக்கிகளும் 1 கைத்துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இன்ஸ்பெக்டர்: பயர்ஆம்ஸ் சட்டத்திற்கு எதிரான குற்றம் செய்திருக்கிறார்கள்.

ஜி. ஜி பொன்னம்பலம்: அதனை பதிவுசெய்யவேண்டும்.

இன்ஸ்பெக்டர்: அதுமட்டுமல்ல வேறுசட்டத்தின் கீழும் குற்றம் செய்துள்ளார்கள்.

மேல் விசாரணையை இம் மாதம் 13ம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான் சந்தேகநபர்களை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். (க)

## NOTICE

It has been brought to my attention that individuals are going about collecting money towards the Welfare Association and Building Fund of St. John's College, Jaffna. The Manager nor the Principal of the College have authorised anyone to make such collections. Members of the Public are requested to inform the Police when unauthorised persons call for funds.

Principal,
St. John's College,
Jaffna.
3-10-78. 0488

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 389 - Registered as a Newspaper in SriLanka

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை கொழும்பு தேசிய லொத்தர் சபைக் காரியாலயத்தில் இழுக்கப்பட்ட 682 வது சுவீப்முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
06 M 0717
ரூ. 100,000-00

இரண்டாவது பரிசு
20 D 0964
ரூ. 40,000-00

மூன்றும் பரிசு
14 T 0772
ரூ. 10,000-00

தலா ரூபா 1501-05 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 10 A 0584 | 15 A 0678 |
| 27 A 0073 | 04 B 0424 |
| 04 B 0747 | 09 B 0831 |
| 20 B 0957 | 23 B 0169 |
| 08 C 0339 | 14 C 0261 |
| 17 C 0278 | 25 C 0550 |
| 25 C 0741 | 30 C 0397 |
| 04 D 0527 | 28 D 0072 |
| 03 E 0294 | 05 E 0424 |
| 07 E 0478 | 07 E 0787 |
| 08 E 0870 | 08 E 0988 |
| 14 E 0867 | 20 E 0650 |
| 30 E 0147 | 09 F 0608 |
| 17 F 0008 | 28 F 0275 |
| 30 F 0783 | 32 F 0530 |
| 02 G 0684 | 03 G 0560 |
| 08 G 0006 | 11 G 0757 |
| 17 G 0665 | 23 G 0768 |
| 24 G 0428 | 27 G 0190 |
| 11 H 0653 | 21 H 0803 |
| 06 J 0146 | 18 J 0577 |
| 27 J 0075 | 05 K 0545 |
| 10 K 0134 | 15 K 0709 |
| 17 K 0227 | 25 K 0447 |
| 04 L 0426 | 07 L 0717 |
| 19 L 0070 | 19 M 0591 |
| 24 M 0920 | 04 N 0528 |
| 21 N 0548 | 02 O 0087 |
| 05 O 0023 | 15 O 0618 |
| 27 O 0513 | 32 O 0821 |
| 02 P 0972 | 03 P 0104 |
| 04 P 0575 | 26 P 0730 |
| 31 P 0773 | 06 Q 0308 |
| 12 Q 0653 | 16 Q 0411 |
| 24 Q 0305 | |
| 03 S 0614 | 15 S 0099 |
| 17 S 0698 | 18 S 0777 |
| 01 T 0492 | 06 T 062 |
| 06 T 0846 | 11 T 0295 |
| 22 T 0910 | 24 T 0084 |
| 06 U 0370 | 09 U 0404 |
| 12 U 0529 | 16 U 0451 |
| 03 V 0849 | 30 V 0093 |
| 03 W 0158 | 06 W 0790 |
| 14 W 0360 | 08 X 0073 |
| 16 X 0879 | 19 X 0558 |
| 04 Y 0018 | 10 Y 0556 |
| 21 Y 0065 | 24 Y 0239 |
| 31 Y 0198 | 03 Z 0340 |
| 08. Z 0760 | 16 Z 0841 |
| 31 Z 0705. | |

(இவை யாவும் உறுதிப்படுத்தப் படவேண்டியவை.)

## பல்கலைக்கழக...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தொடங்கியது.

''இந்த அரசாங்கத்தின் மும்மொழிக் கொள்கை சரியான பாதையில் ஒருபடி எனலாம். ஆனால் 1956 தொடக்கம் நவதேசிய வாதிகளினால் ஏற்படுத்தப்பட்ட பிழையான விளக்கங்கள் முற்றாக நீக்கப்படவேண்டும். அப்போது ஒரு புதிய சமூகம் தோன்றும். அதில் எல்லாபட்டங்களிலும் எல்லோருக்கும் சமத்துவம் ஏற்படும்.'' (க-அ)

புளியங்கூடலில்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு காணி வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடலில் இடம்பெற்ற கலவரத்தால் பாதிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கு, காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, காணி, விவசாய அமைச்சு யாழ். அரசாங்க அதிபரைக் கோரியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடபகுதியில் எங்கு காணி வழங்கலாமென்றும், அவர்கள் எங்கு குடியேற விரும்புகிறார்களென்றும் அமைச்சுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு அரசாங்க அதிபர் கோரப்பட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர், நாரந்தனையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம், பின்னர் சாதிக் கலவரமாக உருவெடுத்ததையடுத்துச் சிறுபான்மைத் தமிழ்மக்கள் பலர் பாதிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு, காணி பெற்றுக்கொடுப்பதற்கு, அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்புக் குழுவும் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (கெ)

## யாழ் வளாகத்தில் விரிவுரைகள் ஆரம்பம்

(கோண்டாவில்)

யாழ். வளாகத்தில் புதிதாக அனுமதிபெற்ற மாணவர்களுக்கான விரிவுரைகள் நேற்று ஆரம்பமாகின.

விரிவுரைகளுக்கு முன்னர் மாணவமன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் மாணவர்மன்றத் தலைவர் திரு. எஸ். ஜெயபாலன் உரைநிகழ்த்தினார். விரிவுரைகளுக்குச் சென்ற புதிய மாணவர்களை பழைய மாணவர்கள் துன்புறுத்தாது அன்பான முறையில் வரவேற்றனர்.

## இன்று

யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மின்தறி நிலைய பணியாளர் நலனோம்பு கட்டிடத்துக்கான அடிக்கல்லை இன்று காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்ணுண்டோ நாட்டிவைப்பார். கோண்டாவில் இருபாலை வீதியிலுள்ள மின்தறி ஆலையில் இவ்வைபவம் இடம் பெறும். (கூ)

0 0 0

(யாழ்ப்பாணம்)

தீண்டாமை ஒழிப்புப் பற்றி ஆராய்வதற்கான கருத்தரங்கொன்று இன்று காலை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெறுகிறது. இக்கருத்தரங்கில் முக்கிய பிரமுகர்களும், மதத்தலைவர்களும் கலந்துகொள்வார்கள். (கெ)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் பாடசாலை விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது.

யாழ். லயன் கழகத் தலைவர் திரு. சி. இராஜேந்திரா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

திருமதி கே. இராஜேந்திரா பரிசில்களை வழங்குவார். (உ)

## காருக்குப் பிணை

(பண்டத்தரிப்பு)

கொக்குவில் துப்பாக்கிச் சூட்டு கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஆனைக்கோட்டை பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த பண்டத்தரிப்பு வாசியான காரச்சாரதி எஸ். பத்திநாதன் யாழ். நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது அவரை இம்மாதம் 10 ம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதுவரை காலமும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரான பத்திநாதனுக்கு சொந்தமானதும் மேற்படி கொலைச் சம்பவத்துக்கு பாவிக்கப்பட்டது என்று சந்தேகிக்கப்படுவதுமான ஏ 40 காரை 2000 ரூபா உறுதிப்பிணையில் எடுத்துச்செல்வதற்கு நீதிபதி அனுமதி வழங்கினார்.

சந்தேக நபரின் சார்பில் சட்டத்தரணி திரு. எஸ். நாகராஜா ஆஜரானார். (உ)

## கேரதீவு - சங்குப்பிட்டி இறங்குதுறையில் மின்னொளி இன்றி அவதி!

(யாழ்ப்பாணம்)

கேரதீவு - சங்குப்பிட்டி இறங்கு துறைகளில் வெளிச்ச வசதிசெய்யப்படாமையால் பெரிதும் சிரமமுறவேண்டியுள்ளதாகக் கவலைதெரிவிக்கப்படுகிறது.

சேவையில் ஈடுபடும் வள்ளச் சாரதி இருளில் மிகக்கஷ்டமடையவேண்டியுள்ளதாம்.

இரு துறைகளுக்கும் ஒளிக்கம்பங்கள் நாட்டி ஒளியை ஏற்படுத்துவது குறித்து எம். பி.க்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## குடும்ப...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்றார். முதற்தடவையாக இலங்கைக்கு அறிமுகம்செய்து வைக்கப்படும் குடும்பநீதிமன்றங்கள், குடும்பத்தகராறுகளைச் சுமுகமாகத் தீர்த்துவைக்க உதவும் என்றும் நீதி அமைச்சர் கூறினார். (ம)

திரு. சாம் பி. சி. பேர்ணுண்டோ

அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக

1978 அக்டோபர் 4-ந் திகதி புதன்கிழமை

எமது அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகிறோம்

த பினன்ஸ் கம்பனி லிமிட்.

191, மின்சார நிலைய வீதி, -- யாழ்ப்பாணம்.